2 கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

O.S.No.333/2025

24.03.2026 வா.சா.1 திருமதி.லதாபாய்

முதல் விசாரணை தொடர்ச்சி

| | | |
|---|---|---|
| 28.03.2012 | உயில் ஆவணம் அசல் | வா.சா.ஆ.3 |
| 17.07.2025 | வாதி வட்டாட்சியருக்கு அளித்த மனு | வா.சா.ஆ.4 |
| 20.08.2025 | வாதி மாவட்ட ஆட்சியருக்கு அளித்த மனு | வா.சா.ஆ.5 |
| | மாவட்ட ஆட்சியர் மனுவை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை | வா.சா.ஆ.6 |
| | வாதியின் Pan Card அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்படுகிறது. | வா.சா.ஆ.7 |
| | வாதியின் வாக்காளர் அடையாள அட்டை அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்படுகிறது. | வா.சா.ஆ.8 |

1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

4 மற்றும் 5 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

பிராதில் கூறியுள்ள 28.03.2012 தேதியிட்ட உயில் ஆவணத்தை யார் எழுதினார்கள் என்றால் எனது அப்பா செல்வமணி எழுதினார். மேற்படி உயில் ஆவணத்தை தவிர வேறு எந்த ஆவணத்திலும் எனது பெயர் செல்வின் லதாபாய் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஒரு தகப்பனார் உயில் ஆவணத்தை ஏற்படுத்தும்போது அவரது மகளின் பெயரை தவறாக எழுதுவதற்கு வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். இது எனது தகப்பனார் ஏற்படுத்திய உயிலுக்கும் பொருந்தும் என்றால் சரிதான். மேற்படி உயிலில் எனது பெயரை தவிர எனது சகோதர, சகோதரிகளின் பெயர் சரியாக உள்ளது என்றால் சரிதான். உயில் ஏற்படுத்தும் போது எனது தகப்பனார் நன்கு படித்து பார்த்து நல்ல மனநிலையில் தான் தயார் செய்தார் என்றால் சரிதான். லதாபாயும், செல்வின் லதாபாய் என்பவரும் ஒரு நபர் தான் என்பதை காட்டுவதற்கு எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உயில் மூலமாக கிடைத்த சொத்தை நான் அனுபவம் செய்யவில்லை என்றால் சரிதான். நான்

அனுபவம் செய்ததாக பிராதில் கூறியிருப்பது பொய் என்றால் சரிதான். இந்த வழக்கை ஒரு உயில் ஆவணத்தை ஊர்ஜிதப்படுத்துவதற்காக வேறு விதமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. செல்வின் லதாபாய் என்பவரும், லதாபாய் என்பவரும் ஒருவரே என்பதை நிரூபிக்கும் வகையில் எந்தவொரு ஆவணத்தையும் சரிவர தாக்கல் செய்யாததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. உயர்நீதிமன்ற நீதிபேராணை உத்தரவின் படி 4ம் பிரதிவாதிக்கு ஒரு நபர் சான்று வழங்க அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல.

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL

Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2026.03.24 18:12:25 +0530